# காலாண்டுத் தேர்வு - 2023

வகுப்பு : 11
காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி -I

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்** 14x1=14

1. ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
   ................ இல்லது பனுவல் அன்றே
   அ) பனுவல் ஆ) பாயிரம் இ) பாடல் ஈ) காவியம்
2. கவிஞர் சு.வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுப்பு ......................
   அ) புல்லின் இதழ்கள் ஆ) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
   இ) தமிழின் கவிதையியல் ஈ) உயிர்த்தெழும் காலத்துக்காக
3. முல்லைத் திணை பாடுவதில் வல்லவர் ............................
   அ) கபிலர் ஆ) ஓரம்போகியார் இ) பேயனார் ஈ) அம்மூவனார்
4. உலகச் சிட்டுக்குருவிகள் நாள் ........................
   அ) மார்ச் 20 ஆ) ஏப்ரல் 20 இ) மே 20 ஈ) ஜீன் 20
5. தமிழ்நாட்டின் மாநில மரம் ...................
   அ) வாழை ஆ) பலா இ) தென்னை ஈ) பனை
6. கூற்று : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்
   விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லாண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்றும் சரி விளக்கமும் சரி ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
7. "ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூல்களை எரித்தால் போதும், அவர்கள் அறிவு மேலும் வளர்வதற்கு முடியாமல் நின்றுவிடும்" எனக் கூறும் நூல் ......................
   அ) ஃபாரன்ஹீட் 541 ஆ) ஃபாரன்ஹீட் 451 இ) ஃபாரன்ஹீட் 154 ஈ) ஃபாரன்ஹீட் 415
8. ஒப்புரவு என்பதன் பொருள் ............................
   அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
9. தொல்காப்பியத்தில் உள்ள இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
10. குளிரும் <u>மந்தையும் கொண்டலும்</u> காக்கும் – தடித்தச் சொல்லின் இலக்கணக் குறிப்பு.
    அ) உம்மைத்தொகை ஆ) எண்ணும்மை இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
11. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ..................
    அ) ஐங்குறுநூறு ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) நற்றிணை
12. சரியானதைத் தேர்ந்தெடுக்க
    அ) வரை–மலை ஆ) வதுவை–திருமணம் இ) வாரணம்–யானை ஈ) புடவி–கடல்
    i) அ, ஆ, இ–சரி; ஈ–தவறு ii) ஆ, இ, ஈ – சரி; அ–தவறு
    iii) ஆ, இ, ஈ – சரி; ஆ–தவறு iv) அ,ஆ, ஈ – சரி; இ–தவறு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

13. பொருத்துக.

அ) நேரிசை ஆசிரியப்பா – i) முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்

ஆ) இணைக்குறள் ஆசிரியப்பா – ii) அடிகளை மாற்றினாலும் ஓசையும்பொருளும் மாறாது வரும்

இ) நிலைமண்டில ஆசிரியப்பா – iii) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா – iv) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்

அ) iii, i,iv, ii ஆ) iv, iii,ii, i இ) ii, iii, iv, i ஈ) ii, i,iv, iii

14. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள். – எண்ணச் சொல்கிறவர்கள் யார் ? எண்ணுபவர்கள் யார் ?

அ) மாணவர்கள், ஆசிரியர்கள் ஆ) ஆசிரியர்கள், மாணவர்கள்

இ) பெற்றோர்கள் குழந்தைகள் ஈ) கவிஞர்கள் மாணவர்கள்

## பகுதி -II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x2=6

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது ?
16. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது ?
17. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை ?
18. புதுக்கவிதை விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x2=4

19. மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன ?
20. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனார் கூற்று யாது ?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7x2=14

22. உவமை, உருவகம் – வேறுபடுத்துக.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) வாழ்வான் ஆ) பிரிந்தோர்
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) பூஞ்சோலை ஆ) செங்கயல்
25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    தேர்வெழுத வேகமாய் போங்க. நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    கனை, கணை
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
28. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
    அ) தங்கை (அல்லது) ஆ) வைகை
29. விகுதிகள் எவற்றை உணர்த்தும் ?
30. கலைச்சொல்லாக்கம் தருக. அ) Migration ஆ) Culture



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பகுதி -III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது ?
32. காற்றின் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது ? ஏன் ?
33. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
34. "ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x4=8

35. வாளினும் வலிமை பெற்றது மொழி – விளக்குக.
36. 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x4=12

39. அ) வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)


ஆ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பொருந்தகை யான்கண் படின். – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. அ) "மகள் நிலை உரைத்தல்" துறையைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

ஆ) "இரவில் சிறைப்பறமாகத் தோழி சொல்லியது" என்னும் துறையைச் சான்று தந்து விளக்குக.

41. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை ? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.
42. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

43. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ ? வெண்ணிலாவே!

- கவிமணி

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கு விடை தருக.** 3x6=18

44. அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும்நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

46. அ) 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை ?

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

அ) 'உண்டால் அம்ம ..................' எனத் தொடங்கும் புறநானூறுப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'வில்லேர் ..................' எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

*******

M. POOVARASAN M.Sc B.Ed.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net